**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 101/2023** **Date:24.07.2026.**

**(PW1)-** பழனிகுமார்

<u>**2** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் BA படித்துள்ளேன். நான் எந்த வருடம் போக்குவரத்து துறையில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 1992 வருடம் சேர்ந்தேன். நான் மேற்படி தேதியில் சேர்ந்ததற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அப்போது தற்காலிகமாக நியமிக்கப்பட்டேன் ஆவணம் எதுவும் கிடையாது. எந்த வருடமாக நிரந்தரமாக சேர்ந்தேன் என்றால் 1995 ஆம் வருடம் சேர்ந்தேன். மேற்படி வருடத்தில் நிரந்தரமாக சேர்ந்ததற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி காலத்தில் எனத சம்பளம் எவ்வளவு என்றால் நினைவில்லை.

2. எனது பணி நியமன ஆணையில் மேற்படி விபரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் நினைவில்லை. மேற்டி நிரந்தர பணிநியமன ஆணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் வீட்டில் இருந்தால் தாக்கல் செய்யலாம். நான் நிரந்தரமாக பணி நியமிக்கப்பட்ட பின்பு எவ்வளவு சம்பளம் கொடுத்தார்கள் என்றால் ரூ.18000/- ஆம் கொடுத்தார்கள். நான் ஓட்டுநராக பணியில் சேர்ந்தேனா என்றால் ஓட்டுநராக தான் பணியில் சேர்ந்தேன். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 2000 ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது.

3. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 4 ஆண், 1 பெண் ஆகும். எனது தங்கை என்ன படித்துள்ளார் என்றால் B.A M.S படித்தார். எனது தங்கை தற்போது கண்டன்விளை மற்றும் ஆளூரில் கிளினிக் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது அப்பா உயிருடன் இருந்த காலத்தில் எங்கெல்லாம் கிளினிக் நடத்தினர் என்றால் திங்கள் சந்தை மற்றும் ஆளூரில் நடத்தி வந்தார். வடசேரி மற்றும் வள்ளியூரில் நடத்தி வந்தாரா என்றால் முதலில் வைத்திருந்தார் பின்பு அதை அடைத்துவிட்டார். கண்டன்விளையில் கிளினிக் நடத்திவந்தாரா என்றால் அது வீடாகும் கிளினிக் நடத்தவில்லை, வரும் நபர்களுக்கு வைத்தியம் பார்ப்பார்.

4. பேயன்விளையில் கிளினிக் வைத்திருந்தாரா என்றால் இல்லை. எனது அப்பா எவ்வளவு வருடம் வைத்தியம் பார்த்தார் என்றால் 40 வருடங்களாக பார்தார். அவர்

வைத்தியம் பார்ப்பதற்கு அனுமதி பெற்றிருந்தாரா என்றால் பெற்று இருந்தார். எனது அம்மாவும் வைத்தியம் பார்ப்பார் என்றால் இல்லை. வழக்கின் 2 ஆம் பிரதிவாதி RAMB அனுமதி பெற்றுள்ளரா என்றால் அது பற்றி தெரியாது. எனது அப்பா நடத்தி வந்த வைததியசாலையை தான் எனது தங்கை தொடாந்து நடத்திவருகிறாா் என்றால் சரியல்ல, எனது தங்கை தனியாக தொடங்கி நடத்திவருகிறார்.

5. இரணியல் பகுதியில் எனது அப்பா பிரபலமான வைத்தியர் என்றால் சரிதான். திங்கள் சந்தை, கண்டன்விளை, ஆளுர், ஆத்திகான்விளை ஆகிய பகுதிகளில் மேற்படி வைத்தியத்தின் மூலம் வருமானத்தின் அடிப்படையில் சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல, திங்கள் சந்தையில் வாங்கிய சொத்து எனது சம்பாத்தியத்தில் பெறப்பட்டது. ஆத்திகான்விளை பகுதியில் எனது பெயரில் 50 செண்ட் சொத்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பா பெயரில் ஆத்திகான்விளையில் உள்ள சொத்தை மிரட்டி எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல.

6. கண்டன்விளையில் உள்ள சொத்து எனது அப்பாவின் பெயரில் உள்ள சொத்து என்றால் சரிதான். அதில் மொத்தம் எவ்வளவு செண்ட் சொத்து உள்ளது என்றால் சுமார் 15 செண்ட் இருக்கும். அதில் 2 ஆம் பிரதிவாதிக்கு 2.5 செண்டும், மீதுள்ள நபர்களுக்கு 4,3.750 செண்டு என்று பிரித்துக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**